YISHUN SECONDARY SCHOOL
Subject :Tamil (1204)
Level & Stream: Sec 4 Normal Technical

| The Curriculum and Approaches to Learning | Key Programmes / Competitions |
|---|---|
| தமிழ்மொழிப் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் அடிப்படை மொழிதிறன்களைப் பெற தமிழ்மொழிக் கற்பித்தலில் பல்வேறு உத்திகளையும், கற்றல் பயிற்றுவளங்களையும், ஊடகங்களையும் மாணவர்களின் வயது மற்றும் அனுபவத்திற்கேற்ப வழங்கி மகிழ்வூட்டும் கற்றலை வழங்குதல். மாணவர்களின் ஆர்வ நிலையைத் தூண்டவும் அவர்களின் ஆற்றலை வளப்படுத்தவும் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பற்றிய தகவல்களைத் தகவல் தொழில்நுட்பத்தோடு இணைத்து தமிழ்மொழி கற்றலை வழங்குதல். | பொங்கல் விழா, இரு வார தமிழ்மொழி விழா, வாசிப்புப் பயிற்சித்திட்டம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகப் போட்டிகள், தமிழ்மொழி மாதப் போட்டிகள் மற்றும் கற்றல் பயணங்கள். |

| Term | Learning Experiences (chapter, activity) | Learning Outcomes & Assessment |
|---|---|---|
| 1 | **<u>பாடநூல், பயிற்சிநூல் தொகுதி 1-4</u>**<br><br>**<u>படித்தல்</u>**<br><br>வரம், சினுதானியங்கள், கடந்து வந்த பாதை, இளம் தொழில்முனைவர்கள் ஆகிய தலைப்புகளில் அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>நேர்முகத்தேர்வுக்குத் தயாராதல்,நேர்காணல் நிகழ்த்துதல்,சிங்கப்பூரிலுள்ள ஒரு சுற்றுலா தளம்,தன்விவரக் குறிப்பு எழுதுதல் | • பனுவலைச் சரியான உச்சரிப்போடும் பொருத்தமான சொல்லழுத்தத்துடனும் பொருளுணர்ந்து வாய்விட்டுப் படிப்பர். பகுதியில் இடம்பெற்றிருக்கும் சில அருசஞ்சொற்களின் பொருளை அறிந்துகொள்வர்.<br><br>• தன் விவரக் குறிப்பு எழுதுவதற்குரிய முறையை அறிந்துகொண்டு தன்விவரக் குறிப்புப் படிவத்தை நிறைவு செய்வர். அலுவலக மின்னஞ்சலில் தாங்கள் வடிவமைத்த தன்விவரக் குறிப்பை இணைத்து அனுப்ப அறிந்துகொள்வர். |

| | | |
|---|---|---|
| | **<u>இலக்கணம்:</u>**<br>ஆகுபெயர், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், ஒரு, ஓர், சில, சிலர், பல, பலர், ஆகிய இலக்கணக்கூறுகளைக் கற்றுக்கொள்வர்.<br><br>**<u>இலக்கியம்:</u>**<br>நல்ல மாற்றம், மனசாட்சி, அக்கறை தந்த மகிழ்ச்சி, விடுகதைப் பாடல்கள் பற்றி அறிவர்.<br>9 மரபுத்தொடர்கள், 7இணைமொழிகள், பழமொழி, திருக்குறள்<br><br>**<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br>விளம்பரம்,சிற்றுரை, ஆகிய தலைப்புகளில் பனுவல்களை கேட்டுக் கருத்துகளை எழுத்துவழியாகவும் பேச்சுவழியாகவும் பரிமாறிக் கொள்வர். | • பல்வேறு இலக்கணக் கூறுகளை அறிவதுடன் வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்த அறிவர்.<br><br>• ஒருபக்கக் கதையைப் படித்து கலந்துரையாடுவர். விடுகதைப் பாடல் குறித்து அறிந்துகொள்வர் .<br><br>• தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன்கள் – பல்லூடகங்களைப் பயன்படுத்திக் கற்றல். |
| 2 | **<u>பாடநூல், பயிற்சிநூல் தொகுதி 5,6</u>**<br>**<u>படித்தல்:</u>**<br>இளம் தொழில் முனைவர்கள், உலக அமைதிக்குப் பாடுபடுவோம் ஆகிய தலைப்புகளில் அமைந்த படித்தல் பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>விளம்பரத் திட்டமிடுதல், கருத்துரைத்தல்<br><br>**<u>இலக்கியம்:</u>**<br>வினாவிடைப் பாடல்,கதைப்பாடல் | • பனுவலைத் தெளிவான உச்சரிப்போடும்சரளத்தோடும் வாய்விட்டுப் படிப்பர்.<br><br>• மின்விளம்பரம் ஒன்றைத் தயாரிக்கக் கற்றுகொள்வர்.<br>• இணையத்தில் இருக்கும் பதிவுகளுக்குக் கருத்துத்தெரிவிக்கும் முறையை அறிவர்.<br><br>• மாணவர்கள் வினா விடை பாடல், கதைப்பாடல் பற்றி அறிந்துகொனள்வர். |

| | | |
|---|---|---|
| | **<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br>தேர்வுக்கான கேட்டல் கருத்தறிதல் மாதிரிப் பயிற்சிகளைச் செய்வர். | • ஒலிப்பகுதியைக் கவனமாகக் கேட்டுக் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>• கருத்துப்பரிமாற்றத்தின்போது மற்றவர்களின் கருத்தைக் கேட்டுத் தங்கள் கருத்துகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பர்; தேவையேற்படின் தமது கருத்துகளில் தேவையான மாற்றத்தைச் செய்வர்; வகுப்பில் கலந்துரையாடுவர். தக்க சான்றுகளுடன் ஆமோதித்தோ மறுத்துரைத்தோ முடிவெடுப்பர்.<br><br>**<u>மதிப்பீடு:</u>**<br><br>தேசிய தேர்வு<br><br>தாள் 1 மற்றும் 2 |
| 3 | **<u>பயிற்சிகள்</u>**<br>**<u>படித்தல்:</u>**<br>முந்தைய ஆண்டுத் தேர்வுத் தாள்களையும் பிற பள்ளிகளின் தேர்வுத் தாள்களையும் பயிற்சி செய்வர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>முந்தைய ஆண்டுத் தேர்வுத் தாள்களையும் பிற பள்ளிகளின் தேர்வுத் தாள்களையும் பயிற்சி செய்வர்.<br><br>**<u>இலக்கணம்:</u>**<br>உயர்நிலை 1இலிருந்து கற்றுக்கொண்ட இலக்கணக்கூறுகளைப் பயிற்சித்தாள்களின் மூலம் மறுபார்வை செய்து பயிற்சி செய்வர்.<br><br>**<u>இலக்கியம்:</u>** | • பல்வேறு திறன்களைப் பெற மீண்டும் பயிற்சிகளில் ஈடுபடுவர்.<br>• தேர்வுக்குத் தயாராகுவர்.<br><br>**<u>மதிப்பீடு:</u>**<br><br>தேசிய தேர்வு – வாய்மொழி மற்றும் கேட்டல் |

| | | |
|---|---|---|
| | மரபுத்தொடர்கள் இணைமொழிகளுக்கானப் பயிற்சிகளைச் செய்வர்<br><br>**<u>கேட்டல்\நோக்கல் மற்றும் பேசுதல்:</u>**<br>கேட்டல் கருத்தறிதல் தேர்வுத் தாள்களையும் வாய்மொழித் தேர்வுத் தாள்களையும் செய்வர். | |
| 4 | **<u>பாடத்திருப்பம், மீள்ப்பார்வை</u>**<br>**<u>படித்தல்:</u>**<br>கடந்த ஆண்டு தேர்வுத் தாள்கள், பிற பள்ளி தேர்வுத் தாள்கள் ஆகியவற்றிலுள்ள படித்தல் பனுவல்களைப் படிப்பர்.<br>**<u>எழுதுதல்:</u>**<br>தேர்வுப் பயிற்சியாக சில தட்டச்சுப் பயிற்சியை மேற்கொள்வர்.<br><br>**<u>இலக்கியம்:</u>**<br>மரபுத்தொடர்கள், இணைமொழிகள் ஆகியவற்றுக்கான பயிற்சித்தாள்களைச் செய்வர். | • மாணவர்கள் இதுவரைப் பெற்ற திறன்களை மறுபார்வையிடுவர். மீண்டும் பயிற்சி செய்வர்.<br><br>**<u>மதிப்பீடு:</u>**<br><br>தேசிய தேர்வு |